# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,272—1962 අගෝස්තු 24 වැනි සිකුරාදා—1962.8.24

13,272 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 489 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 489 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைச் சட்டம்

இயந்திரத்தொழிற் சம்பளச்சபையில் 1962 ம் ஆண்டு மே மாதம் 17 ந் திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம்வகிக்க பின்வரும் பேர்வழிகளை, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில், தேசீயமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச்சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப் படுகிறது.

வி. சா. ம். த மெல்,
தொழில், தேசீயமய சேவை மந்திரி காரியாலய நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ந் தேதி.

**நியமன அங்கத்தவர்கள் :**

திரு. ரி. சிவப்பிரகாசபிள்ளை
திரு. எல். எச். சுமணதாச
திரு. சி. சூரியகுமாரன்

**முதலாளிகளின் பிரதிநிதிகள் :**

திரு. எம். எச். ஆர். அஸ்றப்பெறி
திரு. ஈ. ஜே. உவெள்ஹம்
திரு. டி. பி. பெனற்
திரு. டி. பி. டி எஸ். குணசேகர
திரு. வி. ரி. செல்லத்துரை
திரு. டி. சி. ஆர். குணவர்த்தன
திரு. அயன். ஈ. அமரசிங்க
திரு. எட்லி. டீ சில்வா
திரு. ஜே. வீரக்கோன்

**தொழிலாளரின் பிரதிநிதிகள் :**

திரு. என். சண்முகதாசன்
திரு. எச். பி. ஆரியதாச
திரு. ஜி. பி. பெரேரா
திரு. எஸ். ஏ. டபிள்யூ. சில்வா
திரு. திலக குலசேகர
திரு. ஜே. ஏ. ஆராச்சி அப்பு
திரு. எச். சி. வெடிவர்த்தன
திரு. ஏ. டபிள்யூ. அந்திரியாஸ்
திரு. ஆர். ஆர். ஜேமிஸ் பர்ணாந்து

8–877

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ), 114 (2) ஆகிய பிரிவுகளின்படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, வர்த்தக அதிபராகிய, சினிகே றிச்சாட் வால்ரர் டி சில்வா ஆகிய நான், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மக்கள் வங்கியை அங்கீகாரம் பெற்ற நிதி உதவும் ஒரு தாபனமாக இவ்வறிவித்தல் மூலம் வெளிப் படுத்துகிறேன்.

ஜீ. ஆர். டபிள்யு. டி சில்வா,
வர்த்தக அதிபர்.

கொழும்பு, ஆகஸ்ட் 13, 1962.

8–764

### ஈட்டுச் சட்டம்

(89 ம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 3 (இ), 114 (2) ஆகிய பிரிவுகளின் படி எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் கொண்டு, வர்த்தக அதிபராகிய, சினிகே றிச்சாட் வால்ரர் டி சில்வா ஆகிய நான், அச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மகாஜன பி(f)னான்ஸ் லிமிடெட் தாபனத்தை அங்கீகாரம் பெற்ற நிதி உதவும் ஒரு தாபனமாக இவ்வறிவித்தல்மூலம் வெளிப்படுத்துகிறேன்.

ஜீ. ஆர். டபிள்யு. டி சில்வா,
வர்த்தக அதிபர்.

கொழும்பு, ஆகஸ்ட் 13, 1962.

8–762

## அறிவித்தல்

விலங்கின, மரவின பாது காப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பெற்ற பிரமாணங்களின் ஆறுவது பிரமாணத்தின்கீழ் உருகுணே தேசிய நந்தவனங்களினுள் 1962 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 1 ம் திகதியிலிருந்து 30 ம் திகதிவரை பொதுமக்கள் பிரவேசிக்க உத்தரவு அளிக்கப்படமாட்டாது என இத்தால் விளம்பரம் செய்யப்படுகிறது.

ஏ. எஸ். ஏ. பகீர்,
பதில் பாலகர்.

வன ஜந்து பரிபாலனப் பகுதி,
கொழும்பு, 15.8.62.

8–829.

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக் திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்மாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.